## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு

## அசல் வழக்கு எண். 161/2024

**PW: 1 செந்தில்குமார், த–பெ.கருப்பையா**

**நாள் 19.06.2025**

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) நான் எனது தாயாருடன் தயரின் சொந்த ஊரான சுந்தரபாண்டியம் ஊருக்கு குடியேறும் போது எனக்கு வயது என்ன இருக்கும் என்றால் 8 வயது இருக்கும். எனது தகப்பனார் இறந்த வருடமான 1993 லேயே நாங்கள் சுந்தரபாண்டியம் குடியேறினோம் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் வரை நாங்கள் சுந்தரபாண்டியம் கிராமத்தில் தான் வசித்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். சுந்தரபாண்டியம் ஊருக்கு வந்த பிறகு 1,2 பிரதிவாதிகளிடம் பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பாட்டி உயிருடன் இருந்த வரை பேச்சுவார்த்தையில் தான் இருந்தோம். எனது பாட்டி 2000 வருடத்தில் காலம் சென்றுவிட்டார். எனது பாட்டி காலம் செல்லும் வரை நாங்களும் 1,2 பிரதிவாதிகளும் சுமுகமான உறவில் தான் இருந்தோம் என்றால் சரிதான். தாவா 4, 5 லக்க வீடுகளுக்கு பாட்டி உயிருடன் இருந்த வரை நாங்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி சென்றுவந்தோம் என்றால் சரிதான்.

2) எனது பாட்டியை 1, 2 பிரதிவாதிகள் தான் பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் எனது பாட்டியை கவனித்து வந்ததால் தான் தாவா 4, 5 லக்க வீடுகளை எனது பாட்டி 1, 2 பிரதிவாதிகளுக்கு தான பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எங்களை திருப்பரங்குன்றத்தில் இருந்து சுந்தரபாண்டியத்திற்கு அனுப்பியவுடன் பத்திரம் எழுதிக்கொண்டார்கள். அது பற்றி எங்களுக்கு தெரியாது. தான பத்திரத்தின் நகலை எப்போது பெற்றேன் என்றால் 2015 ம் வருடத்தில் பெற்றேன். தான பத்திரத்தை நான் நேரடியாக நகல் பெற்றேனா என்றால் வில்லங்க சான்று பெற்று தான் அதன் மூலம் தான் தான பத்திரத்தின் நகல் பெற்றேன். அந்த வில்லங்கசான்று வா.சா.ஆ.8 ஆகும்.

வா.சா.ஆ.8 எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை விண்ணப்பித்து பெற்றேன் என்றால் புல எண் அடிப்படையில் விண்ணப்பித்து நகல் பெற்றேன். வா.சா.ஆ.8ன் அடிப்படையில் தான் தான பத்திரம் எனக்கு தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பாட்டி உயிருடன் இருந்த வரை தாவா சொத்தை பிரிப்பதற்கு எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் மைனர் என்பதால் அது பற்றி எங்களுக்கு தெரியாது. நான் மேஜரான பிறகு 21 வயதுக்குள் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சொத்து சமந்தமாக பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது. எத்தனை வருடமாக பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றால் பல வருடங்களாக பேச்சுவார்த்தை நடந்தது. பாட்டி இறந்த பின்பில் இருந்தே பேச்சுவார்த்தை நடைபெற்றது. நான் தாக்கல் செய்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வழக்கை சட்டக்காலத்திற்குள் தாக்கல் செய்துவிட்டோம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு எந்த வகையிலும் உதவாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தை நான் படித்து விபரங்கள் தெரிந்து கொண்டேனா என்றால்தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.5 ஆவணத்தில் இந்திராணி சொத்து தனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டதா அல்லது பூர்விக சொத்தா என்று எவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்றால் கிரையம் மூலம் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் இந்திராணிக்கு கிரையம் மூலம் சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்து என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது கூட்டுக்குடும்ப சொத்து.

4) வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் இந்திராணிக்கு எந்த கிரைய ஆவணத்தின் எண் மூலம் தனக்கு கிடைத்ததாக குறிப்பிட்டு ஆவணம் எழுதியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில்

குறிப்பிட்டுள்ள முன் கிரைய பாத்திய ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டிக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்து மற்றும் கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதிக்கு தாவா 4, 5 லக்க சொத்துக்களில் தனிப்பட்ட உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா 4, 5 லக்க சொத்தை 1ம் பிரதிவாதி சட்ட காலத்திற்கும் மேலாக உரிமையேற்று அனுபவம் செய்து வருவதால் அந்த சொத்துக்களில் எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.6 ஆவணம் பற்றி நான் படித்து விபரம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் இந்திராணிக்கு எந்த கிரைய ஆவணத்தின் எண் மூலம் தனக்கு கிடைத்ததாக குறிப்பிட்டு ஆவணம் எழுதியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முன் கிரைய பாத்திய ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டிக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்து மற்றும் கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் 2ம் பிரதிவாதிக்கு தாவா 6வது லக்க சொத்துக்களில் தனிப்பட்ட உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா 6வது லக்க சொத்தை 2ம் பிரதிவாதி சட்ட காலத்திற்கும் மேலாக உரிமையேற்று அனுபவம் செய்து வருவதால் அந்த சொத்துக்களில் எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6ன் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் தாவா 4, 5 மற்றும் 6 இலக்க சொத்துக்களுக்கு தீர்வை செலுத்தி அனுபவம் செய்து

வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா 4, 5 மற்றும் 6 இலக்க சொத்துக்களை பொறுத்து எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ.7 ஆவணத்தை நான் படித்து பார்த்து விபரம் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி 1,2 பிரதிவாதிகள் சொத்தை பிரிவினை இன்றி தங்களுக்கான பாகத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்களா என்றால் சரிதான். மேற்படி கிரைய காலத்தில் நாங்கள் ஊரில் கிடையாது அந்த கிரையம் பற்றி எங்களிடம் கலந்து கொள்ளவும் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்கு கிடைக்கக்கூடிய பங்கை மட்டும் கிரையம் கொடுத்துள்ளதால் மொத்த சொத்தையும் கேட்பதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு சேரவேண்டிய பங்கை மட்டும் தான் நாங்கள் கேட்கிறோம். மொத்த சொத்தையும் கேட்கவில்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கேத்தையா என்பவர் யார் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியும். எங்கள் சொத்துக்கும் அவருக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 லக்க சொத்துக்களில் கேத்தையா என்பவருக்கு எந்த இலக்க சொத்து பாத்தியப்பட்டது என்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு எந்த இலக்க சொத்து பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், கேத்தையா என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் புலஎண் வேறு, 1, 2 பிரதிவாதிகள் கிரையம் செய்த சொத்தின் புலஎண் வேறு. இந்த விபரங்களை பிராதில் தெளிவாக விளக்கி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தெளிவாக நான் விளக்கி சொல்லியிருந்தால் கேத்தையா என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றும் எனது பிராது முறையாக எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா 7 வது லக்க சொத்தை பொறுத்து எனது பிராது தெளிவாக இல்லை என்றும் அதனால் 7 வது லக்க சொத்தை பொறுத்து எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்களை ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் இது நாள் வரை எடுத்தேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.9 பாண்டி என்பவர் பெயருக்கு எப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் 2015 ம் வருடத்தில் தான் தெரியவந்தது. மேற்படி பாண்டி என்பவர் கிரையம் பெற்ற பின்பு பட்டாவை தனது பெயருக்கு மாற்றி அனுபவித்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்கள் வழக்கிற்கு உதவாது என்றால் சரியல்ல. நாங்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பிற்கு 1, 2 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பிய பின்பும் உண்மை சங்கதிகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு